# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2345/64 - 2023 අගෝස්තු මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.08.17

*2345/64 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, சிறப்புப் பண்ட அறவீட்டுச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, சிறப்புப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்களைப் பொருத்தமட்டில், அந்த அட்டவணையின் நிரல் II இல் உள்ள தொடர்புடைய உள்ளீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் ஒரு சிறப்புப் பண்டக வரி விதிக்கப்படுகிறது.*

**அட்டவணை**

| *நிரல் I* | | | | *நிரல் II* |
|---|---|---|---|---|
| *பண்டங்களின் விபரம்* | | | | *சிறப்புப் பண்ட அறவீடு* |
| | *எச். எஸ். தலைப்பு* | *எச். எஸ். குறியீடு* | *விபரம்* | |
| *1.* | *10.05* | *1005.90* | சோளம் | கி. கி. 25.00 ரூபா |
| *2.* | *07.13* | | உளுந்து : | |
| | | *0713.31.22* | தோலுரித்தது, பிரிந்தாலும் இல்லாவிட்டாலும் | கி. கி. 300 ரூபா |
| | | *0713.31.29* | ஏனைய | கி. கி. 300 ரூபா |
| *3.* | *07.13* | *0713.31.19* | ஏனைய - பாசிப்பயறு | கி. கி. 300 ரூபா |

2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சோளம், உளுந்து மற்றும் பாசிப்பயறு என்பவற்றின் இறக்குமதி விவசாய அமைச்சின் பரிந்துரையின் பேரில் அனுமதிக்கப்படும்.

3. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சிறப்புப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளைகள் மற்றும் பின்வரும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளைகள் 2023, ஓகத்து 18 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

(i) உளுந்து (எச். எஸ். குறியீடு 0713.31.22 மற்றும் 0713.31.29) இறக்குமதி தொடர்பாக வெளியிடப்பட்ட 2023, மாச்சு 04 ஆந் திகதிய 2321/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி.

(ii) பாசிப்பயறு (எச். எஸ். குறியீடு 0713.31.19) இறக்குமதி தொடர்பாக 2022, ஒற்றோபர் 13 ஆந் திகதிய 2301/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி.

4. மேற்கூறிய கட்டளையானது, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, சிறப்புப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 2023, ஓகத்து 18 ஆந் திகதி தொடங்கி ஆறு மாத காலத்திற்கு செல்லுபடியாகும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, ஓகத்து 17.

EOG 08 - 0207

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.